கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயம்புத்தூர்

**SOP .No. 141/2020**

PW.1

2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25-ஆம் நாள் வியாழக்கிழமை 1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்) திரு. ஆர்.சக்திவேல், பி.ஏ., பி. எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | D.ராதிகா | ஜாதி | |
| தகப்பனார் / கணவர் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

முதல் விசாரணை

நான் இம்மனுவில் 1 ஆம் மனுதாரர் ஆவேன். 2 ஆம் மனுதாரர் எனது இளவர் மகள் ஆவார். எனது கணவர் பெயர் செந்தில்குமார் ஆவார். எனது தரப்பு சாட்சியத்திற்கு சத்தியப்பிரமாணம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனக்கும் செந்தில்குமாருக்கும் 08.06.2016 அன்று திருமணம் நடந்தது. திருமணத்தின் பயனாய் 08.05.2017 அன்று இளவர் மகள் சாதனா பிறந்தார். எனது கணவர் தன் வாழ்நாள் காலத்தில் வியாபாரங்கள் செய்து வந்தார். அவர் ஆயுட் காப்பீட்டு கழகத்தில் இரண்டு ஆயுட் காப்பீடு பாலிசிகளையும் , 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஒரு பாலிசையும், 3 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஒரு பாலிசியையும் எடுத்திருந்தார். என் கணவர் 08.08.2020 திடிரென கல்லீரலில் ஏற்பட்ட கோளாரால் ராயல் கேர் மருத்துவமனை கோயமுத்தூர் மருத்துவமனையில் காலமானார். எனது கணவரின் தாயார் ஜானகி 2011 ஆம் வருடத்திலேயே காலமாகிவிட்டார். எனது கணவரின் தந்தையார் முத்துசாமி 2007 ஆம் வருடத்தில் காலமாகிவிட்டார். என் கணவர் இந்து சமயத்தவராக இருந்தே காலமாகிவிட்டார். நானும் இளவர் குழந்தையும் இந்து சமயத்தவராகவே உள்ளோம். 4 ஆம் எதிர்மனுதாரர் வெள்ளிங்கிரி எனது கணவரின் மூத்த சகோதரர்

ஆவார். எனவே மனுவின் கீழ் விவரித்துள்ள பாலிசுகளுக்கு 4 ஆம் எதிர்மனுதாரர் வெள்ளிங்கிரியை நாமினியாக என் கணவர் நியமித்துள்ளார். மேற்படி காப்பீடுகள் எங்களது திருமணத்திற்கு முன்பாக என் கணவரால் எடுக்கப்பட்ட காப்பீடுகள் ஆகும். எனவே, மனுவின் கீழ் விவரித்துள்ள காப்பீடுகளுக்கு உள்ள தொகையை சட்டப்படி நானும், எனது மகளும் மட்டுமே பெற உரிமை உடையவர்கள் ஆவோம். அவ்வாறு மனுவின் கீழ் விவரித்துள்ள காப்பீட்டு தொகைகளை பெறுவதற்கு ஏதுவாக வாரிசு சான்றிதழ் வழங்க உத்தரவிட வேண்டுகிறேன். 01.01.2017, 07.02.2019 ஆம் தேதியில் ஆயுட் காப்பீட்டு கழகத்திலிருந்து என் கணவர் பெயருக்கு வந்த கடிதங்கள் ம.சா.ஆ.1, 2. SVB chits India Ltd வழங்கியுள்ள subscriber statement ம.சா.ஆ.3. 29.06.2019 3 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனம் என் கணவர் பெயருக்கு அனுப்பிய காப்பீட்டு ரசீது ம.சா.ஆ.4. 24.11.2014 ஆம் தேதிய SVB Chits India Pvt Ltd என் கணவர் பெயரில் வழங்கியுள்ள பாஸ்புத்தகம் ம.சா.ஆ.5. 28.08.2020 ஆம் தேதியில் LIC நிறுவனத்திற்கு மனுதாரர்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் ம.சா.ஆ.6. எனக்கும் செந்தில்குமாருக்குமான திருமணம் காரமடை அரங்கநாத சாமி திருக்கோயிலில் நடந்தது. அதற்காக கோயில் செயல் அலுவலர் வழங்கிய சான்று ம.சா.ஆ.7. 28.08.2020 என் கணவரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.8. வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.9. 2 ஆம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.10. 18.09.2020 ல் வழக்கறிஞர் மூலம் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல் ம.சா.ஆ.11. 1,2, 5 எதிர்மனுதாரர்கள் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.12,13,14. 09.05.2019 அன்று LIC நிறுவனத்திடமிருந்து என் கணவர் பெயருக்கு வந்த கடிதம் ம.சா.ஆ.15. 22.09.2020 தேதியில் எனக்கு LIC நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற கடிதம் ம.சா.ஆ.16. 29.09.2020 தேதியில் என் வழக்கறிஞர் மூலம் LIC நிறுவத்திற்கு அனுப்பிய

பதிலறிவிப்பின் அலுவலக நகல் ம.சா.ஆ.17. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நான் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்திடமிருந்து பெற்றுள்ள தகவல் ம.சா.ஆ.18. மனுப்படி உத்தரவு செய்ய வேண்டுகிறேன்.

(எதிர்மனுதாரர்களின் எதிர்மனுதாரர்களது வழக்கறிஞர் வேண்டுதலின் பேரில் குறுக்கு விசாரணை 21.12.2021).

ஒம்/ராதிகா,

ஒம்/ஆர்.சக்திவேல்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.